**சிரம வாசனா நிதியம் - 2022**

**----------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

சிரம வாசனா நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சிரம வாசனா நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்,

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) 2019 இன் 15 ஆம் இலக்க சிரம வாசனா நிதிய (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1998 இன் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதி அதிகாரச்சட்டம்** | | |
| (i) 3.3 உப பிரிவு மற்றும் 3.4. (உ) உப பிரிவுகளின் பிரகாரம், அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபைக்கு அதன் கூட்டங்களின் செயற்பாடுகள் மற்றும் அந்த கூட்டங்களில் செயற்படும் விதம் ஆகியவற்றை முறைமைப்படுத்தல் தொடர்பான விதிகளை உருவாக்கும் அதிகாரம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் | சிரம வாசனா நிதியத்தின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன், விதிகளை தயாரிப்பதற்கான வரைபுகள் தற்போது தொழில் அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், தற்போது உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது, தற்போது சிரம வாசனா அதிகாரச்சட்டத்தினை மீள | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாறான விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.<br>தொழில் ஆணையாளர் நாயகம், தொழில் நியாயச் சபையொன்று, பிணக்கு தீர்ப்பாளர் ஒருவர் அல்லது தொழில் நீதிமன்றமொன்று அல்லது நீதிமன்றமொன்று எதிர்காலத்தில் ஏதேனும் எழுத்துமூல ஏற்பாட்டின் கீழ் சாட்டப்பட்டுள்ள அல்லது விசாரிக்கப்பட்டவாறுள்ள ஏதேனும் பணியாளர் ஒருவரின் பணி நீக்கம் மல்லது அதனுடன் தொடர்புடைய தொழில் தகராறு தொடர்பான வழக்கு நடவடிக்கைக்காக பணியாளர்களுக்கு சட்டரீதியாக நிவாரணத்தை வழங்குவதற்கு, நிதி ரீதியான நிவாரணத்தை வழங்குவதற்கு, அமைய அடிப்படையில் உருவாக்கப்படும் விதிகளால் சபையினால் தீர்மானிக்கப்படும் ஒரு தொகைக்கு இணங்க வேண்டிய போதிலும், இந்த சட்ட உதவி வழங்குவதற்குரிய விதி 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தியமைக்க கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளதுடன், எதிர்காலத்தில் பணிப்பாளர் சபையின் அறிவுரைக்கமைய விதிகளை தயாரிப்பதற்கு உரிய வரைபுகள் மற்றும் அதிகாரச்சட்டதத்தினை தயாரிப்பதற்குரிய வரைபுகளும் ஒரே தடவையில் மேற்கொள்ள கலந்துரையாடல் இடம்பெற்றவாறு உள்ளது. | |
| (ii) | 13.1 உப பிரிவு மற்றும் 13.2 (அ) உப பிரிவின் பிரகாரம், நிதியம் மற்றும் லொத்தர் சபையினால் இணங்கிய பெறக்கூடிய எண்ணிக்கையான லொத்தர் சீட்டுக்கள் மற்றும் சில லொத்தர் வகைகள் சபையினால் ஒவ்வொரு வருடமும் பேணப்பட வேண்டியதுடன், நிதியத்தினால் தேசிய லொத்தர் சபையுடன் அவ்வாறானதொரு இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கவில்லை. நிதியம் மற்றும் லொத்தர் சபை ஆகியவற்றுக்கிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு ஏனைய விடயங்களுக்கிடையே,<br>• அவ்வாறு நடாத்தப்படும் சீட்டிழுப்புகளில் வழங்கப்படும் பரிசுகள் தொடர்பில்,<br>• அந்த லொத்தர்களின் | லொத்தர் உடன்படிக்கைக்குரிய விடயங்கள் தொடர்பில் பல வருடங்களாக லொத்தர் சபை நிதி அமைச்சுடன் கலந்துரையாடல் மேற்கொண்ட போதிலும், உரிய பதிலை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உரித்து கோரப்படாத பரிசுகள் தொடர்பில் செயற்படும் விதம் தொடர்பில் மற்றும்,<br><br>• லொத்தர் சீட்டுக்களிலிருந்து கிடைக்கும் பணத்தில் நிதியத்திற்காக ஒதுக்கப்பட வேண்டிய தொகை தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டிய போதிலும், நிதியம் மற்றும் தேசிய லொத்தர் சபை ஆகியவற்றுக்கிடையே அவ்வாறானதொரு இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | 14.1 உப பிரிவின் பிரகாரம், சபையின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் நிறைவேற்றுதல் தொடர்பில் அமுலிலுள்ள அல்லது அதனுடன் தொடர்புடைய அல்லது அதனுடன் இணைந்த விடயங்கள் தொடர்பில் அல்லது இந்த அதிகாரச்சட்டத்தின் ஊடாக விதிகளை உருவாக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அல்லது தேவைப்படும் என கருதப்படும் விடயங்களுக்காக விதிகளை சபையினால் உருவாக்க இயலுமான போதிலும், அந்த விதிகள் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | சிரம வாசனா நிதியத்தின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன், விதிகளை தயாரிப்பதற்கான வரைபுகள் தற்போது தொழில் அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், தற்போது உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது.<br><br>தற்போது சிரம வாசனா அதிகாரச்சட்டத்தினை மீள திருத்தியமைக்க கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளதுடன், எதிர்காலத்தில் பணிப்பாளர் சபையின் அறிவுரைக்கமைய விதிகளை தயாரிப்பதற்கு உரிய வரைபுகள் மற்றும் அதிகாரச்சட்டத்தினை தயாரிப்பதற்குரிய வரைபுகளும் ஒரே தடவையில் மேற்கொள்ள கலந்துரையாடல் இடம்பெற்றவாறு உள்ளது. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும். |
| (iv) | அதிகாரச்சட்டத்தின் 6 (ஆ) பிரிவின் பிரகாரம், பணியாளர்கள் பணிபுரிந்த நிறுவனங்கள் முன்னறிவிப்பின்றி மூடப்பட்டால், அந்த ஊழியர்களுக்கு நிதி மற்றும் பிற உதவிகள் வழங்கப்பட வேண்டும், ஆனால் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி | ஊழியர்கள் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் முன்னறிவிப்பின்றி மூடப்பட்ட சந்தர்ப்பங்களில் அது தொடர்பிலான தகவல்கள் பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், 2022 ஆகஸ்ட் 18 ஆந் திகதி | அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | |
|---|---|
| வரையிலும் அவ்வாறான நிதி மற்றும் பிற உதவிகள் வழங்கப்படவில்லை. | இடம்பெற்ற பணிப்பாளர் சபையினால் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை வியாபித்து நடைமுறைப்படுத்த அறிவுரை வழங்கப்பட்டது. |

**2. நிதி மீளாய்வு**

**நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு பெறுபேறு ரூபா 12,927,981 ஆன மிகையாக காணப்பட்டதுடன் ஒப்பிடும் போது அதனோடு ஒத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 2,140,835 ஆகும். அதன் பிரகாரம், நிதி விளைவுகளில் ரூபா 10,787,146 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு செயற்பாட்டு வருமானம் மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் ஆகியவை அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**
**நிதியத்தின் குறைப்பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தங்கி வாழ்வோரின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக திரண்ட நிதியத்திலிருந்து மீளாய்வாண்டுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 37,565,720 ஆன தொகையில் ரூபா 5,400,000 தொகை மாத்திரம் கிடைத்திருந்ததுடன், 2004 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் திரண்ட நிதியத்திலிருந்து நலன்பரி நடவடிக்கைகளுக்காக பெற வேண்டிய தொகை ரூபா 378,809,164 ஆகும். அதற்கமைய திறைசேரியிலிருந்து போதிய அளவில் பணத்தை பெற்றுக்கொள்ள முடியாமையால் ஊழியர்களின் மற்றும் அவர்களில் தங்கி வாழ்வோரின் நலன்புரிக்காக அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்ற முடியாதிருந்தது. | நாட்டில் நிலவும் நிதி நெருக்கடியின் மத்தியில் சிரம வாசனா நிதியத்திற்கு தேசிய லொத்தர் சபையினால் செயற்படுத்தப்படும் ஜாதிக சம்பத லொத்தர் வருமானம் திறைசேரியின் செயற்பாட்டு திணைக்களத்திற்கு கிடைத்து அந்த பணம் சிரம வாசனா நிதியத்திற்கு கிடைத்த பின்னர் அதன் பாதிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கரைமய விடுவிக்கப்படுவதுடன், நாட்டின் நிதி நெருக்கடி காரணமாக அவ்வாறு கிடைக்கும் பணம் சிரம வாசனா நிதியம் எதிர்பார்க்கும் நிதி கோரிக்கைகளுக்கு எமக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. | உரிய நிதியேற்பாட்டினை பெற்று அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |